# நிறுத்தற்குறிகள்

**காற்புள்ளி ( , ) வரவேண்டிய இடங்கள் ;**

பொருள்களைத் தனித்தனியாகக் குறிப்பிடும் இடங்கள்.

**(எ.கா)** அறம், பொருள், இன்பம், வீடு வாழ்க்கைப் பேறு நான்கு.

**எச்சச் சொற்றொடர்கள்**

நாம் எழுதும்போது, பிழையற எழுத வேண்டும்.

**இணைப்புச் சொற்கள்**

**(எ.கா)** இனியன் நன்கு படித்தான்; அதனால், தேர்ச்சி பெற்றான்.

திருமுகவிளி

**(எ.கா)** ஐயா, அம்மையீர்

**இணை மொழிகள்**

**(எ.கா)** சிறியவன், பெரியவன், செல்வன், ஏழை.

**நிறுத்தற்குறிகள்;**

வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும். **(எ.கா)** பொழிலன் தோட்டத்திற்கு சென்று, வாழையிலை பறித்து வந்தான்.

மேற்கோள் குறிகளுக்கு முன் காற்புள்ளி வரும். **(எ.கா)** குழந்தை நிலாவைப் பார்த்து நிலா நிலா ஓடி வா என்று பாடியது.

முகவரியில் இறுதிவரி நீங்க ஏனையவற்றின் இறுதியில் காற்புள்ளி வரும். **(எ.கா)** திருமதி ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு , திருவள்ளூர்.

**அரைப்புள்ளி (;) வரவேண்டிய இடங்கள்**

**தொடர்நிலைத் தொடர்கள்**

**(எ.கா)** வேலன் கடைக்குச் சென்றான்; பொருள்களை வாங்கினான்; வீடு திரும்பினான்.

ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் கூறும் இடங்கள்

**(எ.கா)** அறி – அன்பு; அருள்; குளிர்ச்சி; வண்டு ; இரக்கம்; எளிமை.

**அரைப்புள்ளி;** ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும்.

**எ.கா;** கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்; கனக விசயருடன் போரிட்டான்.

உடன்பாடு, எதிர்மறைக் கருத்துக்களை ஒன்றாகக் கூறுமிடத்தில் அரைப்புள்ளி வரும்.

**எ.கா;** நல்லவன் வாழ்வான்; தீயவன் தாழ்வான்.

**முக்காற்புள்ளி வரவேண்டிய இடங்கள்:**

- சிறு தலைப்பு – **எடுத்துக்காட்டு** சார்பெழுத்து
- நூற்பகுதி எண் **– எடுத்துக்காட்டு** பத்துப்பாட்டு 2 : 246
- பெருங்கூட்டுத்தொடர்**–எடுத்துக்காட்டு** எட்டுத்தொகை என்பன வருமாறு;

**முக்காற்புள்ளி**

சிறு தலைப்பான தொகைச்சொல்லை விரித்து கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும் முத்தமிழ் இயல், இசை, நாடகம்.

**முற்றுப்புள்ளி (.) வர வேண்டிய இடங்கள்**

- தலைப்பின் இறுதி எடுத்துக்காட்டு - மரபியல்
- தொடரின் இறுதி எடுத்துக்காட்டு - உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.
- முகவரி இறுதி எடுத்துக்காட்டு– தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்
- சொற் குறுக்கம் எடுத்துக்காட்டு – தொல் - சொல். 58.
- நாள் எடுத்துக்காட்டு – 18/02/2018.

**முற்றுப்புள்ளி**

- சொற்குறுக்கங்களை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு ;** திரு வி க. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி.

- பெயரின் தலைப்பு எழுத்தை அடுத்து முற்றுப்புள்ளி வரும்.

**எடுத்துக்காட்டு ;** நெ. து. சுந்தரவடிவேலு

**வினா குறி (?) வரவேண்டிய இடங்கள்**

ஒரு வினா தொடர் முற்று தொடராகவும், நேர்கூற்று தொடராகவும், இருப்பின் இறுதியில் வினாக்குறி வருதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- அது என்ன? (முற்று)
- நீ வருகிறாயா? (நேர்கூற்று தொடர்)

**வியப்புக்குறி( ) வரவேண்டிய இடங்கள்**

**எடுத்துக்காட்டு**

- எவ்வளவு உயரமானது ( வியப்பிடை சொல்லுக்குப் பின்)
- என்ன தமிழன் பெருமை என்றார் கவிஞர் (நேர்கூற்று வியப்ப தொடரின் இறுதி)
- வா வா வா (அடுக்குச் சொற்களின் பின்)

**விளிக்குறி வரவேண்டிய இடங்கள்**

அண்மையில் இருப்பாரை அழைப்பதற்கும், தொலைவில் இருப்பாரை அழைப்பதற்கும் விழிக்குறி பயன்படுத்த வேண்டும். வியப்புக்குரியும், விளிக்குறியும் ஒரே அடையாள குறியுடையது.

**எடுத்துக்காட்டு**

- அவையூர்
- அவை தலைவீர்

**ஒற்றை மேற்குறி வரும் இடங்கள்**

ஓர் எழுத்தின் சொல்லேனும், சொற்றொடரினும், தன்னையே குறிக்கும் இடம், கட்டுரைப் பெயர், நூற்பெயர் குறிக்கும் இடம், பிறர் கூற்று பகுதிகள், முதலான இடங்களில் ஒற்றைக் குறி வருதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- ஏ என்று ஏளனம் செய்தான்
- பேரறிஞர் அண்ணா செவ்வாழை என்னும் சிறுகதை எழுதியுள்ளார்.
- கம்பனும் மில்டனும் என்னும் நூல் சிறந்த ஒப்பீட்டு நூலாகும்.
- செவிச்செல்வம் சிறந்த செல்வம் என்பர்.

**இரட்டை மேற்கோள் குறி வரும் இடங்கள்**

நேர்கூற்றுகளிலும், மேற்கோள்களிலும் இரட்டைக் குறி வருதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- நான் படிக்கிறேன் என்றான்
- ஒழுக்கமுடைமை குடிமை என்றார்.

**மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்**

**1. பொதுவானவை**

| | |
|---|---|
| Dt | சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| /\ | சொல்லையோ, எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக்கொள்க. |
| ⎡ | புதிய புத்தி தொடங்குக. |



**2. நிறுத்தற்குறியீடுகள்**

| | |
|---|---|
| , / | காற்புள்ளியைச் சேர்க்கவும் |
| ; / | அரைப்புள்ளியைச் சேர்க்கவும் |
| ? / | வினாக்குறி அடையாளம் இடவும் |
| : / | முக்காற்புள்ளிச் சேர்க்கவும் |

**3. இடைவெளி**

| | |
|---|---|
| ⁀‿ | இடைவெளி விட வேண்டாம். சொற்களை அல்லது எழுத்துக்களைச் சேர்க்கவும். |
| # | பத்திகளுக்கிடையில், வரிக்களுக்கிடையில், சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. |

**4. இணைக்க வேண்டியவை**

| | |
|---|---|
|  | இடப்பக்கம் தள்ளவும் |
|  | வலப்பக்கம் தள்ளவும் |
|  | பத்திகளை இணைக்கவும் |
|  | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
|  | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |

**5. எழுத்து வடிவம்**

| | |
|---|---|
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக. |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக. |
| Trs | சொற்கள், எழுத்துக்களை இடம் மாற்றுக. |
| 1.c. | எழுத்துருவை சிறியதாக்குக. |
| U.C. | எழுத்துருவை பெரியதாக்குக. |

**6. குறியீடுகளின் பெயர்**

| | | |
|---|---|---|
| 1. Apostrophe | (’) | எழுத்துக்குறை |
| 2. Semicolon | (;) | அரைப்புள்ளி |
| 3. Colon | (:) | முக்காற்புள்ளி |
| 4. Colondash | (:- ) | வரலாற்றுக்குறி |
| 5. Dittomark | (”) | மேற்படிக்குறி |
| 6. Dash | (-) | இடைக்கோடு |
| 7. Bar | ( / ) | வெட்டுக்கோடு |
| 8. Brackets | (( )) | பிறைக்கோடு |
| 9. Double Brackets | ({ }) | இரட்டை பிறைக்கோடு |
| 10. Large Brackets | ([ ]) | பகர அடைப்பு |

**எழுத்துப் பிழை தவிர்த்தல்**

- ந, ண, ன ற, ர ல, ழ, ள இந்த எட்டு எழுத்துக்களில் நகரம் மட்டும் சொல்லின் தொடக்கமாக வரும். றகர மெய் சொல்லின் இறுதியில் வராது.
- தமிழில் சொல்லின் தொடக்கமாக மெய் எழுத்துக்கள் வருவது இல்லை.
- வல்லின மெய்யோடு சொல் முடியாது.
- வல்லினமெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை. காட்ச்சி, முயற்ச்சி என்று எழுதுவது பிழையாகும்.
- க், ச், த், ப் ஆகியவற்றின் பின் அவற்றின் எழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா.

  **எடுத்துக்காட்டு :** காக்கை, பச்சை, பத்து, உப்பு
- ட், ற் இன்னும் மெய்களுக்குப் பிறகு அவ் எழுத்து வரிசைகளுக்கு க, ச, ப எனும் வரிசைகளுமே வரும்.

  **எடுத்துக்காட்டு :** பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை கற்பவை.
- ட, ற என்னும் எழுத்துக்கள் சொல்லின் முதலில் வாரா.
- ஆயுத எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

  **எடுத்துக்காட்டு** : அஃது, எஃகு
- மெல்லின எழுத்துக்களில் ண, ன சொல்லின் தொடக்கமாக வாரா.
- தனிச்சொல்லின் இடையில் வல்லினத்திக்கு முன் அவ்வல்லின மெய்யோ அவற்றின் இன மெல்லின மெய்யோ வரும். பிற பிற மெய்கள் வருவதில்லை. எடுத்துக்காட்டு தக்கை, தங்கை, பச்சை, இஞ்சி, பட்டம், பத்து, பந்து, தப்பு, பாம்பு, கற்று, கன்று, பண்டு.
- ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துக்களுக்குப் பின் வியங்கோள் வினைமுற்று கள் விகுதி வல்லினத்தின் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாக நிற்கும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு** தேய்க, நாய்கள், தாய் சேய், ஊர்க, ஊர்கள், ஊர் சூழ, செல்க, கால்கள், செல்கணம், வாழ்க, வாழ்தல், தோள்கள்.

- ணகர உற்றினை அடுத்து றகரமும், னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை.

**எடுத்துக்காட்டு** : மன்றம் சரி , மண்றம் தவறு ,கண்டு சரி, கன்டு தவறு

- ஞ், ந், வ் என்னும் எழுத்துக்களில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன எடுத்துக்காட்டு உரிஞ், வெரிந்,பொருந், தெவ் ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும். எடுத்துக்காட்டு: பாய்ச்சு, பார்க்கும் வாழ்க்கை.
- தனிக்குரலை அடுத்து ரகர ழகர ஒற்றுகள் வாரா.
- தனிக்குரலை அடுத்து ரகர ஒற்றுவரின் அதனை தமிழ் இயல்புக்கு ஏற்ப திருத்தி எழுத வேண்டும்.
- நிர்வாகம் (தவறு) – நிருவாகம் (சரி)
- கர்மம் (சரி) கருமம் அல்லது கன்மம் (சரி)
- ரகரத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துக்களும் வாரா.
- உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என மாறும்.
- உயிர்வரின் அது, இது, எது முறையே அஃது, இஃது, எஃது என்று மாறும்.
- இயக்கு, ஓட்டு, அனுப்பு, பெறு முதலான வினைகள், பெயரிடை நிலையான **ந்** என்பதை பெற்று (ந் +அர் =நர்) இயக்குனர், ஓட்டுநர், அனுப்புனர், பெறுநர் என அமையும்.
- உறுப்பு, குழு, ஊர் ஆகிய பெயர் சொற்கள் இன் சாரியை பெற்று உறுப்பினர், குழுவினர், ஊரினர் என அமையும்.



www.tnpscgroup4.in